இருக்கிற விலைவாசி காரணமாக மெஜாரிட்டி சங்கமான ஏ. ஐ. டி. யு. சி. இந்த ஒப்பந்தத்திற்கு மறுப்பு தெரிவித்திருக்கிற போது மீண்டும் கோவையில் இருக்கிற ஸ்பெஷல் டிபுடி கமிஷனர் முன்னால் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு ஒரு சுமுகமான தீர்வு காண அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஒரு பெரிய சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால், அனைவரும் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டால் நலமாக இருக்கும் என்று கருதி, கோவை துணை ஆணையர் இன்றையதினம் பேச்சுவார்த்தை நடத்த எல்லோரையும் அழைத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிசவ பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் குறிப்பிட்ட எதுவும் அவைக்குறிப்பில் இடம்பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற நிலையிலேயே இதை நான் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS